# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## <u>ஆணை நாள். 13.05.2026</u>

## <u>முன்னிலை</u>

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA5608-A-2023</u>**

திரு. S. முத்துக்குமார் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
பெரம்பலூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம் - 621 212.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு ஏற்கனவே (07.04.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கீழ்கண்டவாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள நத்தம் நில வரித் திட்டத்தில் மேற்கூறிய கூட்டுப் பட்டவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதா, அவ்வாறு செய்யப்பட்டிருப்பின் எவ்வாறு மேற்குறிப்பிட்ட பட்டா எண் 284 நத்தமாக மாற்றம் செய்யப்பட்டது, அதன் கோப்பு மற்றும் குறிப்புரைகள் மற்றும் 002003/654, 18.08.2003இன் குறிப்புரைகள், UDRக்கு முன் மற்றும் பின்னர் உள்ள 8A கோப்பு நகல்கள் மற்றும் கூட்டுப் பட்டாவாக மாற்றம் செய்ய எதிர் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல் மற்றும் அறிவிப்பு நகல் முழுமையான தகவல்களை உரிய பொது அதிகார அமைப்பிலிருந்து பெற்று உரிய இணைப்பு ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர்</u>***

***<u>பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 20.05.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு 1. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், 2. திரு. மூ. சீனிவாசன், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் 3. அப்போதைய வட்ட சார் ஆய்வாளர் மற்றும் 4. தற்போதைய பெரம்பலூர் வட்டாட்சியர் ஆகியோருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வட்ட சார் ஆய்வாளர் மற்றும் தற்போதைய பெரம்பலூர் வட்டாட்சியருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. அன்றைய தினம் மனுதாரரும் நேரில் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.***

இந்நிலையில், இவ்வழக்கு இன்று 13.05.2026 முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக 1.திரு.இரா.செந்தில்முருகன், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பெரம்பலூர் மாவட்டம் 2, திரு.ப.சத்தியமூர்த்தி, வட்டாட்சியர், 3.திரு.சீனவாசன், அப்போதைய தலைமையிடத்து துணை வட்டாட்சியர், 4.திரு.ராஜகேசவன், சார் ஆய்வாளர், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் இவ்வாணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 12.11.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், அம்மாபாளையம் ஊராட்சியில் உள்ள சர்வே எண் 106/5ல் உள்ள 0.37ல் நில பதிவேட்டு விவரங்கள், தனது பாட்டி திருமதி சின்னம்மாள் அவர்களின் மறைவிற்கு பிறகு தனது பாட்டனார் திரு நாராயணசாமி அவர்களின் பெயரில் பட்டா தாக்கலாக இருந்து வந்தது. ஆனால் தற்போது 284-ல் 1.துரைசாமி ரெட்டியார் மகன் நாராயணசாமி ரெட்டியார் 2.கிருஷ்ணசாமி நாயுடு மகன் ராஜாராமன் என்பவர்கள் பெயரில் கூட்டுப் பட்டாவாக உள்ளது மேற்படி பட்டா எண் 284 குறிப்புரைகள் 02003/654 18,08,2003இன் குறிப்புரைகளின் விவரங்களை / நகல்களை வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை மேற்படி பெரம்பலூர் மாவட்டம் மற்றும் வட்டம், அம்மாபாளையம் கிராம புல எண்.1C 0.37.00 ஹெக் நிலமானது UDR க்கு முன் முன்புள்ள கைசிட்டாவின் படி தெய்வபாக்கிய மற்றும் குப்புசாமி-2 என்பவர்கள் பெயரில் பட்டா எண்.19 இன் தாக்கலாகியுள்ளது. நிலஉடைமை மேம்பாட்டுத்திட்டதின் படி மேற்படி புல எண்.106/5 0.15.00 ஹெக் பட்டா எண்.284 இன் படி நாரயணசாமி என்பவர் பெயரில் தாக்கலாகியுள்ளது. UDR திட்டத்திற்கு பின்புள்ள கைசிட்டாவின் படி பட்டா எண்.284 புல எண்.106/5 0.15.00 ஹெக் நிலமானது நாரயணசாமி-1 மற்றும் கிருஷ்ணசாமி நாயுடு ராஜாராம்-2 என்பவர்கள் பெயரில் கூட்டாக தாக்கலாகியுள்ளது.

மேற்சொன்ன நாராயணசாமி என்பவரது பெயர் UDR திட்டத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் அம்மாபாளையம் கிராம புல எண்.106/1, 2, 3, 4, 5

மற்றும் 6 ஆகிய உட்பிரிவுகள் பெ.நி.அ.உ.இ.அ.நி.மு ஆ 1/4266/2002 இன்படி நத்தம் நிலவரித்திட்டத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு புதிய எண்களாக 246 முதல் 287 பிரிக்கப்பட்டு நத்த ஆவணங்களை பார்க்கவும் என "அ" பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எண்.106/5 ற்குரிய மாறுதல்கள் நத்தம் நிலவரித்திட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. பராமரிப்பு பணியில் புல எண்.106/5இல் உட்பிரிவுகள் ஏதும் மேற்கொள்ளப்படாததால் 8A கோப்புகள் ஏதும் பதிவாகவில்லை என வட்ட துணை ஆய்வான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கோப்பு தொடர்பான விவரங்களை பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலக பதிவறையிலிருந்து தேடுவதற்கு பெரம்பலூர் வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி 30.04.2026 அன்று 10 கிராம உதவியாளர்கள் கொண்ட குழு அமைத்து கடந்த 05.05.2026 முதல் 09.05.2026 வரை தேடுதல் பணி மேற்கொள்ள ஆணையிடப்பட்டது, மேலும், மனுதாரர் குறிப்பிடும் கோப்பு என்பது பட்டா மாற்றம் தொடர்பான DK கோப்பு என்று அறியப்பட்டது. மேற்படி DK 654/03-04 நாள் 18.08.03 கோப்பு பதிவறையிலிருந்து கண்டறிப்பட்டு திரு இராஜராம் சமர்ப்பித்த மனு மற்றும் இதர ஆவணங்கள் அடங்கிய கோப்பு மற்றும் புல எண் 106/5இல் பட்டா மாறுதல் தொடர்பான உத்தரவு ஆகியவை மனுதாரருக்கு கடித எண் ந.க.அ4/1034/2026, நாள் 12.05.2026இன் படி அனுப்பப்பட்டது என ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் பட்டா எண் 284 தனது பாட்டி திருமதி சின்னம்மாள் அவர்களின் மறைவிற்கு பிறகு தனது பாட்டனார் திரு.நாராயணசாமி படையாச்சி அவர்களின் பெயரில் பட்டா தாக்கலாக இருந்து வந்தது. அதன் பின் தனது தாயார் திருமதி S.தெய்வாம்பிகை பெயரில் 2003 வரை இருந்த்து. ஆனால் தற்போது 284-ல் எவ்விதமான விசாரணை மற்றும் அறிவுப்பு ஏதுமின்றி அப்பட்டா 284ல் 1.துரைசாமி ரெட்டியார் மகன் நாராயணசாமி ரெட்டியார் 2.கிருஷ்ணசாமி நாயுடு மகன் ராஜாராமன் என்பவர்கள் பெயரில் கூட்டுப் பட்டாவாக உள்ளது. மேற்கூறிய இரு நபர்களுக்கும், குறிப்பிட்ட சொத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை; அவர்கள் அச்சொத்துக்கு முற்றிலும் அந்நியர்களாவர். சர்வே எண் 106/5-இல் அமைந்துள்ள 0.37 சென்ட் நிலம் தொடர்பாக, பட்டா எண் 284-இல் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப் பட்டா மாறுதலுக்கான (Mutation) விண்ணப்பத்தையோ அல்லது அது தொடர்பான எவ்வித நடவடிக்கையையோ மேற்கூறிய இரு நபர்களும் ஒருபோதும் சமர்ப்பிக்கவில்லை. எனவே, மேற்படி கூட்டுப் பட்டா மாற்றம் தொடர்பான நத்தம் நிலவரித் திட்ட கோப்பு UDRக்கு முன் மற்றும் UDRக்கு பின் உள்ள 8A கோப்பு நகல் மற்றும், மேற்படி பட்டா எண் 284 குறிப்புரைகள் 02003/654 18,08,2003இன் குறிப்புரைகளின் விவரங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்கள் 1989ம் வரும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், அம்மாபாளையம் கிராமத்திலிருக்கும் கிருஷ்ணசாமி நாயுடு மகன்கள் 1) காட்டு நாயக்கர், 2) ராமசாமி

3) ராஜராம் ஆகிய மூவரும் செய்து கொண்ட பாகப் பிரிவினை செய்யப்பட்டுள்ளது மேற்படி பாகப் பிரிவினை தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆவண பரிசீலனை செய்து யாரிடத்தில் இருந்து இந்த பாகம் கிடைக்கப் பெற்றது என்பது தொடர்பான தகவல்கள் இந்த பத்திரத்தில் குறிப்பிடப்படாத காரணத்தால் இந்த ஆவணம் உருவாக்கப்பட்ட ஆவணமாக இருக்கும் என ஆணையம் கருதுகிறது. எனவே, நத்தம் நில வரித் திட்டத்தில் மேற்கூறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளதா, அவ்வாறு செய்யப்பட்டிருப்பின் எவ்வாறு மேற்குறிப்பிட்ட பட்டா எண் 284 நத்தமாக மாற்றம் செய்யப்பட்டது, அதன் கோப்பு மற்றும் குறிப்புரைகள் மற்றும் 002003/654, 18.08.2003இன் குறிப்புரைகள், UDRக்கு முன் மற்றும் பின்னர் உள்ள 8A கோப்பு நகல்கள் மற்றும் கூட்டுப் பட்டாவாக மாற்றம் செய்ய எதிர் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல் மற்றும் அறிவிப்பு நகல், வட்ட சார் ஆய்வாளர் அறிக்கை மற்றும் வட்டாட்சியரின் குறிப்புரைகள் எதுவும் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக வட்டாட்சியர், பெரம்பலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு உரிய தகவல்களை வழங்கும் நோக்கில் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை விசாரணைக்கு அழைத்து மனுதாரர் உரிய முறையில் அசல் ஆவணங்களான பழைய வருவாய்துறை ஆவணங்கள், சிட்டா, அ பதிவேடு, கிஸ்து ரசீது ஆகியவற்றினை சமர்ப்பிக்கும் பட்சத்தில், மேற்படி பாகம், நத்தம் நில வரித் திட்டத்தில் மேற்கூறிய கூட்டுப் பட்டவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதா, அவ்வாறு செய்யப்பட்டிருப்பின் எவ்வாறு மேற்குறிப்பிட்ட பட்டா எண் 284 நத்தமாக மாற்றம் செய்யப்பட்டது, அதன் கோப்பு மற்றும் குறிப்புரைகள் மற்றும் 002003/654, 18.08.2003இன் குறிப்புரைகள், UDRக்கு முன் மற்றும் பின்னர் உள்ள 8A கோப்பு நகல்கள் மற்றும் கூட்டுப் பட்டாவாக மாற்றம் செய்ய எதிர் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல் மற்றும் அறிவிப்பு நகல் ஆகியவற்றை தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)இன் கீழ் ஆய்வு செய்து, மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை முழுமையான தகவல்களை வழங்கும் நோக்கத்தில் உரிய விசாரணை மேற்கொண்டு, அவ்விசாரணை அறிக்கையின் நகலினை உரிய இணைப்பு ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 09.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு 1. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மற்றும் தற்போதைய பெரம்பலூர் வட்டாட்சியர் ஆகியோருக்கு இவ்வாணையம்***

*உத்தரவிடப்படுகின்றது. அன்றைய தினம் மனுதாரரும் நேரில் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்: SA5608-A-2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பலூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம் - 621 212.

*உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு:*
மேல்முறையீட்டு அலுவலர் /
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பலூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம் - 621 212.

**வழக்கு எண்: SA5608-A-2023**

**மனுதாரர்**
Thiru.S. Muthukumar
127, New Additional Law Chambers,
High Court Buildings,
Chennai - 600 104.

JE/PA 25.05.2026